அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.
044-28143306 / 28143307 / Fax 42124624
www.aismk.in



*அ.எண்.230/2015*

*தேதி.18.9.2015*

# *மூன்றாம் ஆண்டில் அடியெடுத்துவைக்கும் தமிழ் தி இந்து பத்திரிக்கைக்கு ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ வாழ்த்து*

திரு K அசோகன்
ஆசிரியர்,
தி இந்து, சென்னை.

'தமிழால் இணைவோம்' என்ற உங்கள் வாசகம் எப்போதும் மக்கள் மனதில் நிலைக்க செய்து, மூன்றாம் ஆண்டு அடியெடுத்து வைக்கும் உங்கள் சேவை பல வருடங்களுக்கு பொலிவு மாறாமல் தொடர்வதற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்

தமிழ்நாட்டையும் கடந்து உலகெங்கும் பரவியிருக்கும் 14 லட்சம் தமிழ் நெஞ்சங்களை முக நூல் மூலமாக இணைத்து தரமான செய்திகளையும் கருத்துமிக்க தலையங்கம் மூலமாக அறிவு சார்ந்த சமுதாயத்தை வளர்க்க தாங்கள் தொடரும் பணி மென்மேலும் சிறக்க நானும் என் இயக்கத்தை சேர்ந்தவர் அனைவரும் வாழ்த்துகிறோம்.

பாரம்பரிய மிக்க ஆங்கில பத்திரிக்கை 'The Hindu' சேர்த்து வைத்திருந்த பெருமை, மக்களின் மனதில் அதற்கென்ற இடம் இவற்றை தமிழ் பேசும் மக்களிடமும் கொண்டு சேர்த்த பெருமை தங்களை சாரும்.

ஜனநாயகத்தின் 4 ஆவது தூணான பத்திரிக்கை துறையின் தரம் உயர மென்மேலும் உங்கள் சேவை தொடர வேண்டும் என்று எங்கள் இயக்கத்தின் சார்பாக,வாழ்த்துகிறேன்.
நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்.